# தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
# Tamil Study Centre Homebush Inc.
PO Box 4032, Homebush, NSW 2140.

www.tsch.org.au
homebushtsch@gmail.com


## பேச்சுப் போட்டி 2025 ஆண்டு 2

அனைவருக்கும் வணக்கம்

**சூரியன்**

சூரியன் எமக்கு வெப்பத்தையும் வெளிச்சத்தையும் தருகிறது. சூரியனை ஞாயிறு, ஆதவன் கதிரவன் என்றும் அழைப்போம். சூரிய ஒளியில் ஏழு நிறங்கள் உள்ளன. இந்த நிறங்களை வானவில்லில் காணலாம்.

சூரிய வெப்பத்தினால் கடல் நீர் ஆவியாகிறது. மழை பெய்கிறது. தாவரங்கள் வளர்கின்றன. உயிரினங்கள் வாழ்கின்றன. நாமும் வாழ்கிறோம். பகல் வேளையில் வெளிச்சம் தருவது சூரியனே.

ஆதிகாலத்தில் நம் முன்னோர் சூரியனை வழிபட்டார்கள். இன்றும் நாம் சூரியனுக்குப் பொங்கல் செய்து வழிபடுகிறோம். அந்த நாளே தைப்பொங்கல் ஆகும். தினமும் காலையில் நாம் சூரியனை வணங்குவது நன்று.

நன்றி

வணக்கம்